## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பொறியியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து,நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை

மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிலையத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில்

அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிலையத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிலையம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்காமை

| | இயைபான நியமத்திற்கான தொடர்பு சகிதம் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உபகரணங்கள் பொருட்டு பேட்டன்ட்(ஆக்கவுரிமை) உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காக உறப்பட்ட செலவினமான ரூபா 363,706 தொகை கட்புலனாகா சொத்துக்களாக இனங்காணப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.<br>குறித்த சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் இனங்காணுகையில், அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக உறப்பட்ட செலவு மட்டும் கணக்குகளில் பதியப்பட்டிருந்தமையினால் குறித்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 இன்படி கட்புலனாகா சொத்துக்கள் காலக்கழிவு செய்ய வேண்டியபோதிலும் நிலையம் அவ்வாறு செயலாற்றி இருக்கவில்லை. | கட்புலனாகா சொத்துக்களின் ஆயுட் காலத்தினுள் குறித்த சொத்துக்கள் இலாபநட்டக் கணக்கிற்கு காலக்கழிவு செய்யப்படும்.<br>2019 ஆம் ஆண்டில் இந்த சீராக்கங்களை கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 இன்படி கட்புலனாகா சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் கிடைப்பதாயின், குறித்த சொத்துக்களை எதிர்வுகூறி தேறிய நடப்பு பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும்.<br>வருடாந்தம் காலக்கழிவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில்கணக்கீட்டுக் கொள்கைகளை சமர்ப்பிக்கையில் கட்புலனாகா சொத்துக்கள் தொடர்பிலான கணக்கீட்டுக் கொள்கைகள் முழுமையின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டில் இந்த சீராக்கங்களை கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டின்போது பயன்படுத்தப்படும் கொள்கைகளை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய கணக்குகளும் செலுத்தவேண்டிய கணக்குகளும்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ----------------------------- | --------------------------- | ---------------- |
| (அ) | முடிவுறுத்தப்பட்ட 11 செயற்றிட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா11,189,088தொகை 2019மார்ச் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த 11 செயற்றிட்டங்களினுள் 2018 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டரூபா10,828,946 பெறுமதியான 8 செயற்றிட்டங்கள் உள்ளடங்கியிருந்ததுடன், அதற்காக கிடைக்க வேண்டிய தொகையை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பழைய இரு செயற்றிட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா360,142தொகையை அறவிட்டுக் கொள்வதற்காகநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | செயற்றிட்டங்கள் முடிவுறுத்தப்பட்டவுடனே கிடைக்க வேண்டிய தொகைளை அறவிட்டுக் கொள்வதற்குநடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிலையமானதுமுடிவுறுத்தி ஒப்படைத்திருந்த 03 செயற்றிட்டங்களின் **குறைபாடு மேவுகை காலம்** முடிவடைந்திருந்தும் ரூபா 397,521 ஆன பிடிப்புப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 செயற்றிட்டங்கள் பொருட்டானபிடிப்புப் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதுடன் அடிக்கடி நினைவூட்டப்படுகிறது. மற்றைய செயற்றிட்டம் பொருட்டான பிடிப்புப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு குறித்த செயற்றிட்ட காலத்தினுள் இடம்பெற்ற குறைபாட்டினை சரிசெய்யும் வரை இருத்தல் வேண்டும். | பிடிப்புப் பணத்தை மீள அறவிட்டுக் கொள்வதற்கு உரிய காலத்தினுள் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 11,318,783மிகையாக இருந்தவுடன்அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் குறைவுரூபா 6,077,467ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில்ரூபா 17,396,250வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு நிருவாக செலவுகள் ரூபா 19,853,429ஆல் அதிகரித்திருந்தும்,ஏனைய வருமானங்கள் ரூபா 25,446,752ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் திறைசேரி பெறுவனவுகள் ரூபா 18,580,000 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக விளங்கின.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரவலாக எடுத்துச் சென்ற நூலக புத்தகங்களை மீள ஒப்படைப்பதற்காக ஒரு மாத காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் 23 அலுவலர்களுக்குவழங்கப்பட்டிருந்த 45 புத்தகங்கள் அம்மாத காலத்தினுள் மீள ஒப்படைக்காது 15 நாட்களுக்கும் 03 ஆண்டுகளுக்கும் இடையில் நீண்ட காலம் வைத்துக்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிறுவன நூலகத்தின் குறிக்கோள் யாதெனில், நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் ஏனைய சேவைகளில் தேவைப்படும்போது பரிசீலனை செய்வதற்குத் தேவையான புத்தகங்களை வழங்குவதேயாகும். சில ஆராய்ச்சி நடவடிக்கை பொருட்டு சில புத்தகங்களை நீண்ட காலம் பயன்படுத்த வேண்டியுள்ளது. அப்போது அப்புத்தகங்களை நீண்ட காலம் வைத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. புத்தகங்களை இரவலாக எடுத்துச் செல்வதற்கு ஒரு மாத காலம் வழங்கப்படுவது தொடர்ந்து பயன்படுத்துவதற்கு தேவையற்ற சந்தர்ப்பங்கள் பொருட்டேயாகும். இருப்பினும், இரவலாக எடுத்துச் செல்லும் புத்தகங்களை மீள வழங்குதலை மேலும் முறைமைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும. | இரவலாக எடுத்துச் செல்லும் புத்தகங்களை உரிய காலத்தினுள் மீள ஒப்படைக்க முடியாதெனின், திகதியை நீடித்துக்கொள்ளுதல் வேண்டும். அதற்கான முறையியல் ஒன்றைதயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையத்தினால் அறிமுகப்படுத்திய தொழில்நுட்பம் பொருட்டு ஆண்டினுள் 50 அனுமதிப்பத்திரங்களை வழங்குதலை இலக்காகக் கொண்டபோதிலும் 23 அனுமதிப்பத்திரங்களை மட்டுமே வழங்கக்கூடியதாக இருந்தது. அதிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா93,355ஆகும். ஆண்டினுள் 100 அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க இலக்கிடப்பட்டிருந்தது. வருட ஆரம்பத்தில் 163 அனுமதிப்பத்திரதாரர்கள் இருந்தபோதிலும், அவர்களுள் 40 பேர் மட்டுமே இவ்வாண்டினுள் புதுப்பிக்க முன்வந்திருந்தனர். அதிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா93,095ஆகும். எவ்வாறெனினும்,நிலையத்தின் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் முறைகளை பகுப்பாய்வு செய்யும்போது அறிமுகப்படுத்திய பல தொழில்நுட்பங்கள் நாட்டினுள் போதியளவில் பிரபல்யப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 50 தொழில்நுட்ப ஒப்படைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் 23 முயற்சியாளர்கள் மட்டுமே தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்திருந்தனர் என்பதுடன் முயற்சியாளர்களிடமிருந்து கிடைத்த பிரதிச்செயற்பாடு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. சில தொழில்நுட்பங்களின் செல்லுபடியான காலம் ஏற்கனவே விஞ்சியிருப்பதனால் தொழில்நுட்பங்களுக்கு ஏற்புடைய அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கவில்லை. | நிறுவனத்தினால் இனங்கண்ட தொழில்நுட்பங்களை காலத்துக்கு காலம் விருத்திசெய்ய வேண்டும் என்பதுடன், அத்தொழில்நுட்பங்களை சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும். |
| (இ) | செயல் திட்டத்தின்படிநிலையமானது, 13 தொழில்நுட்பங்களை ஆண்டினுள் அறிமுகப்படுத்த இலக்காகக் கொண்டபோதிலும் ரூபா1,102,892கிரயம் கொண்ட 05 தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமாக இருந்தது. குறித்த தொழில்நுட்பங்கள் தொடர்பிலும் கணக்காய்வு திகதி வரையிலும் பேட்டன்ட் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்தல், தொழில்நுட்பங்களை ஒப்படைத்தல் அல்லது அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயல் திட்டத்தின்படி13 தொழில்நுட்பங்களை 2018 ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும், அதற்கு ஏற்புடைய செயற்றிட்டங்களைஆண்டினுள் முடிவுறுத்துவதற்கு முடியாமற்போனமையினால் 5 தொழில்நுட்பங்களை மட்டுமே அறிமுகப்படுத்துவதற்கு இயலுமாக இருந்தது. ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் திட்மிடப்பட்டவாறு உரிய திகதியிலேயே வெற்றிகரமாக முடிவுறுத்துதல் எந்நேரமும் இடம்பெறுவதில்லை. அறிமுகப்படுத்திய தொழில்நுட்பங்கள் பொருட்டான தொழில்நுட்ப ஒப்படைத்தலை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நாளுக்கு நாள் புதிய தொழில்நுட்பங்கள் உருவாவதனால் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை வினைத்திறனாக முடிவுறுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015ஒக்டோபர் 15 ஆம் திகதிய கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளின்பேரில் 2016பெப்ரவரி 01 ஆம் திகதி ஓடு உலர்த்தும் பொறி ஒன்றை உருவாக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன்,2016 திசெம்பர் 31 ஆம் திகதி அது முடிவுறுத்தப்படவிருந்தது. இந்நோக்கத்துக்காக ரூபா 2,000,000தொகை கிடைத்திருந்த போதிலும்ரூபா 5,668,011செலவு உறப்பட்டிருந்தது. எனினும், பொறியின் இயக்கும் வசதியை மேம்படுத்தும் நடவடிக்கைகள் 2019 மாதம் வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | பொறியின் இயக்கும் வசதியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில்2018.12.05 ஆம் திகதி கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சிக்கு பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், இப்பணி பொருட்டுரூபா 2.7 மில்லியன் தொகை அவசியம் என அறிவிக்கப்பட்டிருந்தது. 2019.02.28 ஆம் திகதி இது தொடர்பில் கைத்தொழில் அமைச்சின் அலுவலர்களுடன் கலந்துரையாடலும் கண்காணிப்பு விஜயமும் மேற்கொள்ளப்பட்டதுடன் கைத்தொழில் அமைச்சின் இணக்கப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. | செலவு மேற்கொள்வதற்கு முன்னர் இயைபான நிறுவனங்களிடமிருந்து இணக்கப்பாட்டினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (அ) | செலவுமதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 3,400,000ஆனDesign & Fabrication of a Hyperbaric Oxygen Chamberசெயற்றிட்டம் 2014சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015ஆகஸ்ட் 31 ஆம் திகதி முடிவுறுத்தப்படவிருந்தது. செயற்றிட்டம் பொருட்டு உறப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா 2,503,177ஆகும். பல்வேறு தேவைப்பாட்டின்மேல் 08 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி வரையிலும் 70 சதவீத முன்னேற்றம் மட்டுமே அடையப்பெற்றிருந்தது. 20 மாதங்களில் முடிவுறுத்துவதற்கு இனங்காணப்பட்ட இச்செயற்றிட்டம்பொருட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் 2019யூன் 30 ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டிருந்தது. | நோயாளர்கள் பொருட்டு மருத்துவ உபகரணமொன்றை அறிமுகப்படுத்துதல் இச்செயற்றிட்டத்தின் குறிக்கோளாக இருந்தமையினால் அதன் அவதானம் மற்றும் சிக்கல்மிகுதன்மை காரணமாகவும் வடிவமைப்புத் தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு எட்டு(08) தடவைகள் செயற்றிட்டம் நீடிக்கப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தை மேற்கொள்ளும்போது ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வுகளும் இதற்கு காரணங்களாக விளங்கின. அதன்படி எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைவதற்கு சிரமமான போதிலும் செயற்றிட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு | செயற்றிட்டம் பொருட்டு காலத்தை தீர்மானிக்கும்போது பிரயோக நிலமைகளையும் கருத்திற்கொண்டு நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எவ்விதத்திலேனும் அதனை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் நோக்கில் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க, செயற்றிட்டமானது 2019 யூன் 30 ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டு இந்நடவடிக்கைகள் தொடர்கின்றன. | |
| (இ) | தன்னியக்க அப்பம் தயாரிப்பு பொறியை விருத்திசெய்தல் மற்றும் வணிகமயப்படுத்தும் செயற்றிட்டம்2015மே மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுறுத்தப்படவிருந்தது. 2019 மார்ச் 31 வரை அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது. இச்செயற்றிட்டம் பொருட்டு ரூபா1,309,652 செலவு செய்து கிட்டத்தட்ட 04 ஆண்டுகள் கடந்திருந்தும் இதுவரையில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்றிட்டத்தின் ஆரம்ப படிநிலையில் தன்னியக்க அப்பம் தயாரிப்பு பொறியின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு அவற்றுள் 10 பொறிகளை தயாரித்து கள சோதனையும் நடாத்தி முதலாம் படிநிலை முடிவுறுத்தப்பட்டுள்ளது. முதலாம் படிநிலையில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிர்பார்த்ததை விட அதிக காலம் செலவானது. இரண்டாம் படிநிலையில் தன்னியக்க பெரிய அளவிலான அப்பம் பொறியின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டன. இடையிடையே ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேலதிக காலம் சென்றமையினால் ஒட்டுமொத்த செயற்றிட்டத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்காத மேலதிக காலம் சென்றது. தற்போது ஆராய்ச்சி செயற்றிட்டம் நிறைவடைந்துள்ளது. | செயற்றிட்டம் பொருட்டு காலத்தை தீர்மானிக்கும்போது பிரயோக நிலமைகளையும் கருத்திற்கொண்டு நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இடியப்பம் தயாரிப்புத் துறையில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் வினைத்திறனின்மை நிலமைக்கு தீர்வாக மேம்படுத்தப்பட்ட பகுதியளவில் தன்னியக்க இடியப்பம் தயாரிப்பு உபகரணமொன்றை உற்பத்தி செய்வதற்காக 2016 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் எதிர்பார்த்த செயற்றிட்டக் காலம் ஒரு வருடம் ஆன போதிலும், கணக்காய்வுத் திகதியான பெப்ரவரி 28 ஆம் வரையிலும் | இடியப்பம் தயாரிப்புத் துறையில் தற்போது நிலவும் பிரச்சினைகளை ஆராய்ந்து இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளிடமிருந்து கிடைத்த தகல்களை அடிப்படையாகக் கொண்டு 2016.01.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட | செயற்றிட்டம் பொருட்டு காலத்தை தீர்மானிக்கும்போது பிரயோக நிலமைகளையும் கருத்திற்கொண்டு நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | குறித்த பணி முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்றிட்டம் பொருட்டு இதுவரையில் உறப்பட்ட செலவு ரூபா 286,085 ஆகும். | இச்செயற்றிட்டத்தை ஒரு வருடத்திற்குள் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் குறித்த காலத்தினுள் நிறைவுசெய்யப்பட்ட பொறியை மென்மேலும் விருத்திசெய்தல் வேண்டும் என மேற்கொள்ளப்பட்ட பரீட்சித்துப் பார்த்தலின்போது உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கிடையில், குறித்த செயற்றிட்டத்தை ஆரம்பித்த பொறியியலாளர் அவர்களும் நிறுவனத்திலிருந்து விலகியமையினால் புதிதாக நியமிக்கப்பட்ட பொறியியலாளர் அவர்களது உதவியுடன் செயற்றிட்டத்தை தொடர்ந்தும் செயற்படுத்துவதுடன் இன்னும் சிலநாட்களில் குறித்த செயற்றிட்டம் வெற்றியடையும் என நம்புகின்றோம். | உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | 2014-2018 காலத்துக்கு ஏற்புடையதாக நிலையம், 20 தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை அறிமுகப்படுத்தி இருந்ததுடன் அதற்காக ரூபா 15,400,882 கிரயம் உறப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் அதில் ரூபா 2,589,194 கிரயம் கொண்ட 6 தொழில்நுட்பங்களை மட்டுமே ஒப்படைப்பதற்கு இயலுமாக இருந்தது. அறிமுகப்படுத்திய ஏனைய தொழில்நுட்பங்கள் எதுவும் 2019 ஏப்றல் வரையிலும் சமூகமயப்படுத்தியிருக்கவில்லை. | 2013-2017 காலத்தினுள் அறிமுகப்படுத்திய 20 தொழில்நுட்பங்களில் 2 தொழில்நுட்பங்கள் 2018 திசெம்பர் மாதமளவில் முயற்சியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. 4 தொழில்நுட்பங்கள் பொருட்டு இயைபான சில உபகரணங்களை உற்பத்தி செய்து விற்பதன் மூலம் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 5 தொழில்நுட்பங்கள் கள பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. இதன்படி, இந்த தொழில்நுட்பங்களை ஒப்படைப்பதற்கும் சமூகமயப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | இனங்காணப்பட்ட தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. |
| (ஊ) | 2014-2018 காலப்பகுதியின்போது அறிமுகப்படுத்திய 20 தொழில்நுட்பங்களில் ரூபா 1,567,880 கிரயம் கொண்ட 02 தொழில்நுட்பங்களுக்காக மட்டுமே பேட்டன்ட் அனுமதிப்பத்திரம் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டிருந்தன. | பேட்டன்ட் அனுமதிப்பத்திரத்தை பெறுதலானது ஒவ்வொரு தொழில்நுட்பத்துக்கும் செய்ய முடியாது. இதற்கிணங்க, பேட்டன்ட் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் | இனங்காணப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள் பொருட்டு உடனடியாக |

| | | |
|---|---|---|
| | கொள்வதற்காக தற்போது நான்கு தொழில்நுட்பங்கள் பொருட்டு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. மேலும் தொழில்நுட்பங்கள் பொருட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பேட்டன்ட் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜப்பான் அரசாங்கத்திலிருந்து நன்கொடையாக தனிப்பட்ட நிறுவனமொன்றுக்கு கிடைத்த குடிநீர் சுத்திகரிப்புக்கான ஆறு உபகரணங்களை துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் கட்டணமான ரூபா 359,248 தொகை அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் நிலையத்தினால் உறப்பட்டிருந்தது. இப்பெறுமதி கிடைக்க வேண்டிய தொகையாக பதியப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்படடிருக்கவில்லை. | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் குடிநீர் சுத்திகரிப்புக்கான ஆறு உபகரணங்களை விடுவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் நிலையத்தின் தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்தும் செலவுகளிலிருந்து உறப்பட்டிருந்தது. இந்த தொகையைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பிலான எழுத்திலான அறிவித்தலொன்று அமைச்சுக்கு செய்யப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய பெறுமதியை அறவிடுதல் வேண்டும் என. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயல் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின்படி 11 செயற்றிட்டங்களின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 13 முதல் நூற்றுக்கு 60 வரை மாத்திரமாயிருத்தல் அவதானிக்கப்பட்டது. | ஆராய்ச்சி செயற்றிட்டங்களை மேற்கொள்ளும்போது ஏனைய செயற்றிட்டங்களைப் போலல்லாது எதிர்பார்த்த இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டு செல்கின்றபோதிலும் இலக்குகளை அடைதல் பெரும்பாலும் இயலாது போகும். நாங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் தொழில்நுட்ப முறையியல், தெரிவுசெய்யப்பட்ட மூலப்பொருட்களின் தன்மை, பங்குபற்றும் ஊழியர்களின் அறிவும் அனுபவமும் மற்றும் எடுகோளாக எடுக்கப்பட்ட விடயங்கள் என்பன ஆராய்ச்சியின் முன்னேற்றத்தை | செயற்றிட்டம் பொருட்டு காலத்தை தீர்மானிக்கும்போது பிரயோக நிலமைகளையும் கருத்திற்கொண்டு நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். |

தீர்மானிக்கும் காரணிகளாகும். மேற்படி ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் செயல் திட்டத்தின்படி செயலாற்றிக்கொண்டு செல்கையில் உரிய சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காது காலம் கடந்தபோதிலும் பௌதிக முன்னேற்றம் மாற்றமடையாது. மேலே காட்டப்பட்டுள்ள விடயங்களே மேற்படி செயற்றிட்டங்களின் எதிர்பார்த்த முன்னேற்றம் பொருட்டு தாக்கம் செலுத்தியுள்ளது. அதற்கு மேலதிகமாக, இயைபான செயற்றிட்டத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் சேவையிலிருந்து விலகியமையும் அதற்குப் பதிலாக வேறு பொறியியலாளர்களை ஈடுபடுவதற்கு முடியாமையும் செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை அடையாமைக்கு பெரிதும் தாக்கம் செலுத்திய விடயங்களாகும்.